# பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

## சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

பின்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்ப தகுதி வாய்ந்த, காத்திரமான, சுய ஊக்கம் உடைய, அணியாக பணியாற்றும் பணி ஆர்வம் உடைய நபர்களிடமிருந்து அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் விண்ணப்பங்களை கோருகின்றது.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:

i. இலங்கைப் பிரஜையாகவும்
ii. பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும், தீவில் எப்பாகத்திலேனும் பணியாற்றவும் உடலியல், உளவியல் ரீதியில் தகுதி உடையவராகவும்
iii. சிறந்த நல்லொழுக்கம் உடையவராகவும்

இருக்க வேண்டும்.

1. **முகாமையாளர் சந்தைப்படுத்தல் (** MM 1–1 தரம் II**)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

( அ) ( I) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானம்/வர்த்தகம்/சந்தைப்படுத்தல்/வியாபார முகாமைத்துவம் துறையில் இளமாணி பட்டம்

அல்லது

( II) அதற்கு சமமானதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தில்/நிறுவனத்தில் பெறப்பட்ட பட்டம்

மற்றும்

(ஆ) கணினி அறிவு

மற்றும்

(இ) ஒரு அரசாங்க திணைக்களத்தில் / கூட்டுத்தாபனத்தில் / சபையில் / நியதிச்சட்ட சபையில் அல்லது ஒரு பிரசித்த வணிக ஸ்தாபனத்தில் விற்பனை அல்லது சந்தைப்படுத்தல் பிரிவில் பதவிக்குப் பின்னர் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு கால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவையான தகைமைகளை கொண்டிருத்தல்
2. பதவிற்குப் பின்னர் குறித்த பதவிற்குரிய விடயப்பரப்பில் 'கனிஸ்ட முகாமையாளர் ' பதவி (JM 1-1) தரம் II இல் ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டு கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்**: MM 1-1- ரூ. [91,690 – 10 x 2,480 -15 X 3,450 = 168,240]

(MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 91,690/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 81,710/= ஆகும்**).

மேலே குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**வயது**: 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை**: எழுத்து மூலமான போட்டிப்பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

2. ஒழுங்குபடுத்தல் விவகார அலுவலர் (JM-1-1 IIம் தரம்)

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்தகவியலில் விஞ்ஞான இளமாணிப்பட்டம்

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்தகவியல் அல்லது இரசாயனவியலை உள்ளடக்கிய விஞ்ஞான இளமாணிப்பட்டம்

அத்துடன்

இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்யப்பட்ட மருந்தாளராக இருத்தல்

3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிநுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழிற்கல்வி தகுதியில் 6ம் நிலைக்கு (NVQ Level -06) குறையாத தேர்ச்சி சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் மற்றும் அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம் /சபை அல்லது கீர்த்தி வாய்ந்த வரத்தக நிறுவனம் ஒன்றிலிருந்து மருந்து ஒழுங்குபடுத்தல் துறையில் தகைமைக்கு பின்னரான குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளை பெற்றிருத்தல்

2. இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் மற்றும் விடயத்துறையுடன் தொடர்பான பதவியொன்றில் அனுபவத்தை பெற்றிருத்தல் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்-

தொழிநுட்பவியல் (MA-2-1) ஐஐம் தரப் பிரிவில் குறைந்த பட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்

**சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 ரூ.(72,650-10 X 1,360-18 X 2,040 =122,970)

(MSD சுற்றறிக்கை இல. 01/2025 அட்டவணை II இன் படி, 01.01.2027 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 72,650/= வழங்கப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான தொடக்க சம்பளப் புள்ளி ரூ. 65,633/= ஆகும்).**

**வயது:** 22 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல். உள்ளகப் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை:** எழுத்து மூலமான போட்டிப்பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை

3. **களஞ்சிய காப்பாளர் பதவி (MA 2 -1-தரம் III)**

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:- (a) அல்லது (b) இன் கீழுள்ள தகைமைகள்**

**(a)** மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம், மருந்தாக்க துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 5 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**(b)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய 4 பாடங்களில் திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி அடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் பதவிக்குப் பொருத்தமான மூன்று (03) பாடங்களில் (பொதுப் பரீட்சை வினாத்தாள் தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(iii) ஆறு மாதத்திற்கு குறையாத கணனி சான்றிதழ் பாடநெறி ஒரு மேலதிக தகைமையாக கருதப்படும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**: MA 2-1 : ரூ. [50,540-10x540-7x 630-4x890-20x1,190-87,710]

  (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 50,540/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 46,960/=**).

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

4. **மருந்தாக்க தொழில்நுட்பவியல் - தயாரிப்பு பதவி (MA -2-1 - தரம் III)**

**தகைமைகள்**:

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - கீழுள்ள (a), (b) அல்லது (c)**

**(a)** மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்தாக்க துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 5 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**(b)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய 4 பாடங்களில் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் பதவிக்கு பொருத்தமான விஞ்ஞான அல்லது தொழில் நுட்ப மூன்று (03) பாடங்களில் (பொதுப் பரீட்சை வினாத்தாள் தவிர) சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(iii) ஆறு மாதத்திற்கு குறையாத கணனி சான்றிதழ் பாடநெறி ஒரு மேலதிக தகைமையாக கருதப்படும்.

அத்துடன்

(iv) பிரபல்யமான ஒரு மருந்தாக்கல் நிறுவனத்தில் குறித்த துறைக்கு பொருத்தமான ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**(c) பயிலுநர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்:-**

மேற்குறித்த (b) (i), (ii), (iii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய பயிலுநர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தில் ஒரு மருந்தாக்க தொழில்நுட்பவியல் - தயாரிப்பு பயிலுநராக 1 ½ ஆண்டு கால உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்து எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மருந்தாக்க தொழில்நுட்ப தயாரிப்பாளராக நிரந்தர ஆளணியில் உள்ளீர்க்கப்படுவதற்கு முற்றகைமை பெற்றவர்காளாக கருதப்படுவார்கள்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**: MA 2-1 : ரூ. [50,540-10x540-7x 630-4x890-20x1,190-87,710]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 50,540/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 46,960/=**).

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

5. **மருந்தாக்கல் பூரண தொழில்நுட்ப வல்லுநர் - (MA 2-1 - தரம் III)**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் - கீழுள்ள (a),(b) அல்லது (c)**

**(a)** மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீகரித்துள்ள ஒரு தொழில்நுட்ப/வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவனம் மருந்தாக்கல் தொடர்பாக வழங்குகின்ற 5 ஆம் மட்டத் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமைக்கு குறையாத ஒரு தகுதி சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**(b)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 04 திறமைச்சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் குறித்த பதவிற்குரிய விஞ்ஞான அல்லது தொழில் நுட்ப பாடங்களில் மூன்று சித்திகளை (பொது வினாத்தாள் தவிர்ந்த) பெற்று இருத்தல்.

அத்துடன்

(iii) ஆறு மாதங்களுக்குக் குறையாத கால கணனிப் பாடநெறி சான்றிதழைப் பெற்று இருத்தல் ஒரு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

அத்துடன்

(iv) ஒரு பிரசித்த மருந்தாக்கல் நிறுவனத்தில் குறித்த பிரிவுக்குப் பொருத்தமான ஆகக்குறைந்தது இரண்டு (2) ஆண்டு கால சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.

**(c) பயிலுநர்கள் ஆட்சேர்ப்பு**

மேற்குறித்த (b) (i), (ii), (iii) ஆகியவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடைய நபர்களை பயிலுநராக ஆட்சேர்த்துக்கொள்ளல்

SPMC கூட்டுத்தாபனத்தில் ஒரு பயிலுநர் மருந்தாக்கல் பூரண தொழில்நுட்வியலாளர் ஒருவராக 1 ½ ஆண்டு கால உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்திருத்தலும் மற்றும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தலும் மற்றும் நிரந்தர ஆளணயில் மருந்தாக்கல் பூரண தொழில்நுட்வியலாளர் ஒருவராக உள்ளீர்க்கப்படுவதற்கான முற்-தேவைப்பாடுகளாகும்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்: (கீழுள்ள 1 அல்லது 2 )**

1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்.

2. ஆரம்ப மட்ட பகுதித் தேர்ச்சி வகுதியில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் ஒரு ஊழியராக இருத்தல், உரிய அனுபவத்தை பெற்றுக்கொள்வதற்கு அமைய ஒரு நிரந்தரப் பதவியில் 05 வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவையுடன் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம், மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அடங்கலாக நான்கு பாடங்களுக்கு திறமைச்சித்திகள் உடன் க.பொ.த. சா/த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் SPMC கூட்டுத்தாபனத்தில் ஒரு மருந்தாக்கல் பூரண தொழில்நுட்பவியலாளராக 1 ½ ஆண்டு கால உள்ளகப் பயிற்சியை பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்.

- **சம்பள அளவுத்திட்டம்:** MA 2-1 : ரூ. [50,540 – 10 x 540 – 7 x 630 – 4 x 890 -20 x 1,190 - 87,710]

- **வயதெல்லை**: 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.
- **ஆட்சேர்ப்பு முறை**: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

6. **தரக்கட்டுப்பாட்டு தொழில்நுட்பவியலாளர் (MA 2 -1-தரம் III)**

**தகைமைகள்**:

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:- கீழுள்ள (a) , (b) அல்லது (c)**

**(a)** மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்தாக்க துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 5 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

**(b)** (i) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய 4 பாடங்களில் திறமை சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி அடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க.பொ.த. (உ/த) பரீட்சையில் இரசாயனவியலில் ஒரு திறமை சித்தி அடங்கலாக 02 திறமை சித்திகளுடன் பதவிக்கு பொருத்தமான விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப பாடங்களில் (பொதுப் பரீட்சை வினாத்தாள் தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) ஆறு மாதத்திற்கு குறையாத கணனி சான்றிதழ் பாடநெறி ஒரு மேலதிக தகைமையாக கருதப்படும்.

அத்துடன்

(iv) பிரபல்யமான ஒரு ஆய்வுகூடத்தில் ஆகக்குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால பகுப்பாய்வு அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**(c) பயிலுநர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்:-**

மேற்குறித்த (b) (i), (ii), (iii) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய நபர்கள் பயிலுநர்களாக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தில் ஒரு மருந்தாக்க தொழில்நுட்பவியல் - தயாரிப்பு பயிலுநராக 1 ½ ஆண்டு கால உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்து எழுத்துமூல பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மருந்தாக்க தொழில்நுட்ப தயாரிப்பாளராக நிரந்தர ஆளணியில் உள்ளீர்க்கப்படுவதற்கு முற்றகைமை பெற்றவர்காளாக கருதப்படுவார்கள்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்**

மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

- **சம்பள அளவுத்திட்டம்**: MA 2-1 : ரூ. [50,540-10x540-7x 630-4x890-20x1,190-87,710]

  (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 50,540/= அடிப்படைச் சம்பளம் செலுத்தப் படும். **2026ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 46,960/=**).

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.

- **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைந்த நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

7. **மருந்தாக்கல் பூரண உதவியாள் - (PL-2-தரம் III)**

**தகைமைகள்:-**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1, 2, அல்லது 3)**

(1) மூன்றாம்நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு தொழில்நுட்ப/ வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் மருந்து பொதியிடல் துறைக்கு பொருத்தமாக வழங்கும் தேசிய வாழ்க்கைத்தொழில் தகைமை மட்டம் 02 இற்கு குறையாத ஒரு திறன் சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

(2) க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் நான்கு (04) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

மருந்துகளை பொதியிடுவதில் ஓராண்டு அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

(3) **பயிலுநர்களை ஆட்சேர்த்துக்கொள்ளல்:-**

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் நான்கு (04) திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனத்தில் ஒரு மருந்தாக்கல் பூரண உதவியாள் பயிலுநராக உள்ளக பயிற்சி காலத்தில் ஓராண்டு பயிற்சியை நிறைவு செய்தவர்கள் மருந்தாக்கல் பூரண உதவியாளராக நிரந்தர ஆளணியில் உள்ளீர்க்கப்படுவார்கள்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

1. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு தேவைப்படுத்தப்பட்டுள்ள உரிய தகைமைகளை பெற்றிருத்தல் வேண்டும்.

2. தேசிய வாழ்க்கைத்தொழில் பயிற்சி மட்டம் 2 இற்கு குறையாத திறமைகளுடன் ஒரு செயன்முறை பரீட்சையில் நிரூபித்து உரிய துறையில் ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டு கால தொழில் அனுபவத்தையுடைய அரைத்-தேர்ச்சி மட்டத்திலுள்ள ஊழியர்கள் இந்த பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

- **சம்பள அளவுத்திட்டம்:-** PL-2- ரூ.[42,300/=-10 x 490-10 x 540 -10 x 590 -12 x 630- =66,060]

(01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 42,300/= அடிப்படை சம்பளம் செலுத்தப்படும் என்பதுடன் **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 40,008/=**).

- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

  உச்ச வயதெல்லை உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடையதாகாது.
- **ஆட்சேர்ப்பு முறை:-** கட்டமைந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

8. **பணி உதவியாளர் பதவி - (P L-1- தரம் III)**

**தகைமைகள்**:

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றியவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

- **சம்பள அளவுத்திட்டம்:**PL-1-ரூ.40,500/= - 10x450-10x490-7x540-15x590-62,530/= (01/2025 ஆம் இலக்க MSD சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைக்கு இணங்க, 2027.01.01 ஆம் திகதியிலிருந்து ரூ. 40,500/= அடிப்படை சம்பளம் செலுத்தப் படும். **2026 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப சம்பளம் ரூ. 38,488/=**).
- **வயதெல்லை:-** 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- **ஆட்சேர்ப்பு முறை:-** கட்டமைந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

**பக்க நன்மைகள்:**

- வரவு மற்றும் செயலாற்றுகை ஊக்குவிப்புத்தொகை
- பயன்படுத்தாத வருடாந்த மற்றும் சுகயீன லீவுகளை பணமாக்கல்
- மருத்துவக் காப்புறுதி கிடைத்தல் மற்றும் மருத்துவச் செலவுகள் மீளளிப்பு
- EPFஇற்கு சம்பளத்தின் 15% வீதம் கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல் மற்றும் 10% வீதம் ஊழியர்களால் பங்களிக்கப்படுதல்
- ETFஇற்கு சம்பளத்தில் 3% கூட்டுத்தாபனத்தால் பங்களிக்கப்படுதல்.
- 1983 இன் 12 ஆம் இலக்கப் பணிக்கொடைச் சட்டத்திற்கும், MSD சுற்றறிக்கைக்கும் இணங்க பணிக்கொடை செலுத்தப்படுதல்
- மேலும் ஏனைய பக்க நன்மைகள்

**பொதுவான அறிவுறுத்தல்கள்:**

- குறித்துரைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தைப் பயன்படுத்தி தயாரித்த விண்ணப்பங்கள் உறவினர் சாராத இரண்டு நடுவர்களின் பெயர்களையும், முகவரிகளையும் மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். எல்லாக் கல்வி சான்றிதழ்களினதும் சான்றுபடுத்தப்பட்டுள்ள பிரதிகள் விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் தனித்தனி கடிதவுறையில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் **https://www.spmc.gov.lk** என்ற இணையத்தளத்திலிருந்து தரவுறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

- அரசாங்கத் திணைக்களங்களிலும் மற்றும் நியதிச்சட்ட சபைகளிலும் பணியாற்றுகின்ற ஊழியர்கள், இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அதற்கான நியமனத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்கள் விடுவிக்கப்படுவார்களா என்பதை சான்றுபடுத்த வேண்டிய தத்தமது நிறுவனத் தலைவர்களின் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

- விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவருகின்ற கடித உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு கீழ்காணும் முகவரிக்கு இந்த விளம்பரத் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

- மேற்குறித்த தேவைப்பாடுகளை அனுசரிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்**
இலக்கம் 11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை
கந்தவெல எஸ்ட்ரேட் – இரத்மலான
16.08.2026